## 3. IAY

**3.27. தொகுப்பு வீடுகளை பழுது பார்ப்பதற்கு ஒதுக்கப்பட்ட செலவிடப்படாத தொகையிலிருந்து 1.1.97க்கு முன் கட்டப்பட்ட கச்சா வீடுகள் மற்றும் இந்திரா நினைவுக் குடியிருப்புத் திட்டத்தின் கீழ் கட்டப்பட்ட வீடுகளை பழுதுபார்க்க அனுமதி**

---

ஊரக வளர்ச்சி (ம) ஊராட்சி (மா.அ.தி–2) துறை

அரசாணை (நிலை) எண். 53 நாள்: 30–3–2007

படிக்க:

1. அரசு ஆணை (நிலை) எண்.26, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி துறை, நாள் 3–3–2006
2. அரசு ஆணை (நிலை) எண்.69, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி துறை, நாள் 4–7–2006
3. ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநரின் கடிதம் எண்.38370/2006/IAY-I, நாள் 12–3–2007

**ஆணை**

மேலே படிக்கப்பட்ட ஒன்றில் காணும் அரசாணையில், 1991–ம் ஆண்டிற்கு முன்னால் தொகுப்பு வீடு திட்டத்தின் கீழ் கட்டப்பட்ட ஓட்டு வீடுகளைப் பழுது பார்ப்பதற்காக ரூ.16.75 கோடி நிதி ஒதுக்கி ஆணையிடப்பட்டுள்ளது.

2. மேலே படிக்கப்பட்ட இரண்டில் காணும் அரசாணையில் தொகுப்பு வீடுகள் திட்டத்தின் கீழ் கட்டப்பட்ட ஓட்டு வீடுகளில் பழுதுபார்ப்பதற்காக ஒதுக்கப்பட்ட ரூ.16.75 கோடி தொகையிலிருந்து ரூ.14.50 கோடி தொகையினை சமத்துவபுரங்களில் உள்ள சாலை, குடிநீர், தெருவிளக்கு ஆகிய வசதிகளை சீரமைக்கும் பணிகளை முதற்கட்டமாக மேற்கொள்ளவும் மீதமுள்ள நிதி இருப்பிற்கேற்ப வீடுகளின் பழுதுக்குத் தகுந்தவாறு பழுதுபார்த்தல் பணிகளை மேற்கொள்ளவும் அனுமதித்து அரசு ஆணையிட்டுள்ளது.

3. ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநர் தமது 12–3–2007 நாளிட்ட கடிதத்தில் 1987–88 முதல் 1996–97 வரை கட்டப்பட்ட கச்சா வீடுகள் மற்றும் இந்திரா நினைவுக் குடியிருப்புத் திட்டத்தின்கீழ் கட்டப்பட்ட வீடுகள் பழுதுபார்க்க கூடிய நிலையில் உள்ளதால் தொகுப்பு வீடுகள் பழுதுபார்க்க ஒதுக்கப்பட்ட தொகையில் மீதமுள்ள தொகையான ரூ.2.25 கோடியை பயன்படுத்த அனுமதிக்குமாறும், திருநெல்வேலி மாவட்ட ஆட்சியர் மேற்குறிப்பிட்ட பணிக்கென ரூ.2.11 கோடி ஒதுக்கீடு கோரியுள்ளதாகவும் மேற்குறிப்பிட்ட தொகையை விடுவிக்க அனுமதி கோரியும் அரசைக் கேட்டுள்ளார்.

4. ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநரின் கோரிக்கையை அரசு கவனமாக ஆராய்ந்து கீழ்க்கண்டவாறு ஆணையிடுகிறது.

கச்சா வீடுகள் மற்றும் 1–1–1997–க்கு முன் இந்திரா நினைவுக் குடியிருப்புத் திட்டத்தின் கீழ் கட்டப்பட்ட வீடுகள் ஆகியவற்றை பழுதுபார்க்கும் பணிக்காக ஒதுக்கப்பட்டதில் மீதமுள்ள தொகையான ரூ.2.25கோடி (ரூபாய் இரண்டு கோடி இருப்பத்தைந்து லட்சம் மட்டும்) தொகையை மேற்குறிப்பிட்ட பழுதுபார்க்கும் பணிகளுக்கு பயன்படுத்திக் கொள்ளவும், தேவையின் அடிப்படையில் மாவட்டங்களுக்கு விடுவிக்கவும் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநருக்கு அதிகாரம் அளித்து அரசு ஆணையிடுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

**க.அஷோக் வர்தன் ஷெட்டி**
அரசு செயலாளர்